

# இராமநாதன் பரஞ்சோதி

(ஓய்வுநிலை ஆசிரியர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# "என்றும் சோதியாய்.."

19.03.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் குப்பிளானைப் பிறப்பிடமாகவும் .
129. சிவநகர் . உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்
# இராமநாதன் பரஞ்சோதி

(ஓய்வுநிலை ஆசிரியர்)

அவர்களின் சிவப்பதப்பேறு குறித்த

# "என்றும் சோதியாய்..."

***19.03.2023***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

உயிர் கொடுத்து உருவமாய் எம்மை உயரவைத்து
இராமநாத குலத்தின் மூத்தவனாய்
பார்போற்றிட வாழ்ந்தவரே!

அன்பின் அணிகலனாய் ஆற்றலின் கீற்றாய்
விளையாட்டின் விற்பன்னராய்
என்றும் எம் வழிகாட்டியாய்
ஊர்ப்பணி பலசெய்து
போதுமென

உருத்திரபுரீஸ்வரர் பாதம் சேர்ந்த
எங்கள் அன்புத் தெய்வத்தின்
பாதக் கமலங்களுக்கு
கண்ணீர் சமர்ப்பணங்கள்

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

மனம் மகிழ

23
04
1955



கண் நெகிழ

17
02
2023

# அமரர்

# இராமநாதன் பரஞ்சோதி

அவர்களின்

## "திதி நிர்ணய வெண்பா"

விண்ணுலகோர் ஏற்கும் சுபகிருது வருடம்
விரும்பும் மாசி மாதத்தோடு இணைந்து
மண்ணில் இருள் சூழும் துவாதசி திதியதனில்
வானுலகம் சென்றார் புகழ் பரஞ்சோதியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லாற்
கண்ணிலேன் மற்றோர் களைக ணில்லேன்
கழலடியே கைதொழுது காணி னல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே

## திருவிசைப்பா

ஏக நாயகனை இமையவர்க்கு அரசை
என்னுயிர்க்கு அமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற்கு அருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகு திருவீழி
மிழலை விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை அன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுங் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது உன்னடியின்
கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்த்த முகமொன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்றமுகமொன்றே
மாறுபடு சூரனைவ தைத்தமுகமொன்றே
வள்ளியை மணம் புணர வந்தமுகமொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க ! மலிவளஞ் சுரக்க! மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை யறங்கள் ளோங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மை கொள் சைவநீதி விளங்குக! உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில்

23

04

1955



விண்ணில்

17

02

2023

# இராமநாதன் பரஞ்சோதி

## *அவர்களின் வாழ்க்கை வரலாறு*

ஈழ மணித்திருநாட்டின் யாழ். குடாநாட்டில் சைவமும் தமிழும் சீருடன் வளர்த்த கிராமங்களில் குப்பிளானும் ஒன்று. இக் கிராமம் இயல், இசை நாடகம் ஆகியவற்றில் கொடிகட்டிப் பறந்தது. இயலுக்கு செந்திநாக ஐயரும் இசைக்கு செல்லத்துரையும், நாடகத்திற்கு பிதாம்பரமும் (பேரன்) துறைசார் வல்லுநராகத் திகழ்ந்தார்கள்.

இணுவில் கிராமத்தில் பிறந்த பொன்னையா இராமநாதனும் குப்பிளான் கிராமத்தில் பீதாம்பரம் வாலாம்பிகை இணைவாக இராமநாதன் குடும்பத்தில் முதலாவது முத்தாக 23.04.1955 இல் பரஞ்சோதி மண்ணில் வந்து உதித்தார். இவரின் உடன்பிறப்புக்களாக சாராதாதேவி, சிவசோதி, அருட்சோதி, மோகனதாஸ், சுமதி, றஜனி, கலைச்செல்வி, சச்சிதானந்தம், மீனலோஜினி, ஆகிய ஒன்பது பேர் உடன் பிறந்தனர்.

தந்தையார் இராமநாதன் ஆலயத்தொண்டில் மிகவும் ஈடுபாடு உடையவர். கற்பக விநாயகர் சமாதி கோவில் ஆகிய ஆலயங்களில் மிக பக்தியுடையவர். இதேபோல் தாயார் வாலாம்பிகையும் ஆலயத் தொண்டுகளிலும் பக்தியிலும் ஈடுபடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது ஆரம்பக்கல்வியை யாழ்/குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலத்திலும், இடைநிலை, உயர் கல்வியை யாழ்/ தெல்லிப்பளை மகாஜனா கல்லூரியிலும் பயின்றார். பாடசாலைப் பருவத்திலும் இளமைப் பருவத்திலும் கல்வி மட்டுமன்றி உதைபந்தாட்டம் கொக்கி, கிரிக்கெட், மெய்வல்லுநர் போட்டியில் சிறந்து விளங்கினார். பாடசாலைப் போட்டிகளில் தனது பாடசாலையின் பெயரை மாவட்டத்திலும் நிலை நாட்டியவர். அத்துடன் கிராமத்தில் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தில் சிறந்த உதைபந்தாட்ட (Keeper) வீரனாகவும் பங்குபற்றி குப்பிளான் மண்ணுக்கு பல பெருமைகளைப் தேடித்தந்தார். அத்துடன் கற்பக விநாயகர், சோதிவிநாயகர் , சமாதி அம்மன் கன்னிமார் ஆகிய ஆலயங்களில் பலதொண்டுகள் செய்து சிறந்த பக்தனாகவும் திகழ்ந்தார். பின்னர் கிளிநொச்சி வட்டக்கச்சி விவசாய கல்லூரியிலும் இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்றார்.

பின்பு திருமண வயதை அடைந்தவுடன் கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த சுப்பையா பொன்னம்மா பெற்ற நாகேஸ்வரி (கிளி) தனது வாழ்க்கைத் துணையாக 1978 இல் கைபிடித்து வாழ்ந்து வருகையில் மோகன்ராஜ், கோபிராஜ், சகீகர் என மூன்று புதல்வர்களைப் பெற்றெடுத்தார். தனது பிள்ளைகள் திருமண வயதை அடைந்ததும் மூத்தவர் மோகன்ராஜிற்கு அற்புதராணி எனும் பெண்ணைத் திருமணம் செய்து கரணிகா எனும் பேர்த்தியைக் கண்டு மகிழ்ந்தார். இரண்டாவது புத்திரன் கோபிராஜிற்கு மாதுரி என்னும் மங்கையைத் திருமணம் செய்து கொடுத்து துகிதன் என்னும் மூத்த பேராண்டியையும், கிதுசிகா எனும் பேர்த்தியையும் கண்டு மகிழ்ந்தார். இளையமகன் சகீகருக்கு சர்மிளா எனும் நங்கையைத் திருமணம் செய்து கொடுத்து சாகின், சாரன், சார்வின் ஆகிய மூன்று பேராண்டிகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு மகிழ்ந்தார். தனது பேரப்பிள்ளைகளுடன் விளையாடி மகிழ்வதில் கொள்ளை இன்பமடைந்திடுவார். இவ்வாறு குடும்பத்துடன் மிகவும் மகிழ்ச்சியாக சிவநகரில் வாழ்ந்து வந்தார்.

உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகத்தின் உருவாக்கத்திற்கு ஊர் மக்களுடன் இணைந்து முக்கிய பங்காற்றினார். அத்துடன் விளையாட்டுக் கழகத்தின் கிறிக்கெட், உதைபந்து ஆகிய விளையாட்டுக்களின் வீரராகவும் விளங்கினார். உயர்தரம் கற்றதன் பேறாக 1990 ஆம் ஆண்டு ஆசிரியராக கிளி /சிவநகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நியமனம் பெற்றார். சிவநகர் பாடசாலையின் விளையாட்டு மைதானம் அமைப்பதில் இவரின் பங்கும் முக்கியமானதாகும். 1992, 1993 காலப்பகுதி யில் சிவநகர் பாடசாலையில் முதன்முதலாக பாடசாலை இல்ல விளையாட்டுப்போட்டி நடாத்துவதற்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார். அக்காலத்தில் இயல், இசை, நாடகத்துறையிலும் தனது பங்கினை வகித்து பல நாடகங்களை உருவாக்கினார். 1993 **"கடலதை நாங்கள் வெல்லுவோம்"** எனும் பாடலுக்கு "இசைவும் அசைவும்" எனும் நிகழ்வினை அறிமுகப்படுத்தி பல விளையாட்டு போட்டிகளில் அதை காட்சிப்படுத்தினார். அத்தோடு கிளித்தட்டு விளையாட்டில் சிவநகர் பாடசாலையை மாவட்ட நிலையில் முதன்மையாக்கி சாதனை படைத்தார். விளையாட்டுப் போட்டிகளில் விநோதமான விளையாட்டுக்களை அறிமுகப்படுத்துவதிலும் வல்லவராகத் திகழ்ந்தார்.

தொடர்ந்து சிவநகர் பாடசாலையில் கபடிப் போட்டியை அறிமுகப்படுத்தி மாவட்டம் சார்ந்த போட்டிகளில் வெற்றி பெற்றதோடு 2002 ஆம் ஆண்டு வடகிழக்கு மாகாணம் இணைந்த மாகாண மட்டப் போட்டியில் இரண்டாம் நிலை பெற்று முதன் முதலாக கபடியில் மாகாணமட்ட போட்டியில் வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார். இக்காலப்பகுதியில் 15 வயது பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் பொன்னையா இராமநாதன்



அமரர் இராமநாதன் வாலாம்பிகை




அமரர் ஞானலிங்கம் சாரதாதேவி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலைப்பந்தாட்ட அணி மாவட்ட ரீதியில் முதல் நிலை பெறுவதற்கும் தனது பயிற்சியை வழங்கினார். தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறையின் பலதுறை சார்ந்த விளையாட்டுக்களை கோட்ட மட்டம், மாவட்ட மட்டம் போன்ற நிலைகளில் நடத்துவதற்கு தனது முழு அர்ப்பணிப்பையும் வழங்கினார்.

சிவநகர் அ.த.க. பாடசாலையில் இடப்பெயர்வுக்கு பின்னராக (2010இன் பின்) மீண்டும் கபடி, உதைபந்தாட்ட அணிகளை உருவாக்கி பல போட்டிகளில் மாவட்ட நிலையில் முதல் நிலை பெற வைத்துள்ளார். இதன் பயனாக 2013 ஆம் ஆண்டு தேசிய மட்டக் கபடிப்போட்டியில் 3ஆம் நிலையைப் பெற்று தேசிய சாதனை படைக்க பயிற்சி ஆசிரியராக இருந்தார்.

தொடர்ந்து அவர் சிவபேறு அடையும் வரை விளையாட்டில் தனது அர்ப்பணிப்பான பயிற்சியை வழங்கியுள்ளார். இறுதியாக தனது பேர்த்தி சரணிகா தலைமையில் சிவநகர் பாடசாலை கபடிப்போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடம்பெறுவதற்கு தனது அர்ப்பணிப்பு மிகுந்த சேவையை வழங்கியுள்ளார்.

இவர் விளையாட்டு மட்டுமன்றி உருத்திரபுரம் கிராமத்தில் பல்வேறு சமூகப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளார். 35 ஆண்டுகளாக உருத்திரபுரம் சிவன்கோவிலில் தொண்டனாகவும் சிவநகர் கிராம அபிவிருத்தி சங்கம் , சிவநகர் சன சமூக நிலையம், சிவநகர் கமக்கார அமைப்பு போன்ற பல்வேறு அமைப்புகளில் பல பதவிகளை வகித்துள்ளார்.

நோயின் தாக்கம் அதிகமாக இருந்தபோதும் விளையாட்டு மற்றும் சமூகப் பணிகளில் தனது சேவையினைத் தொடர்ந்து வழங்கி வந்தார். இறுதியாக சிவனாலயத்தில் தொண்டு செய்து விட்டு வீட்டிற்கு வந்து உறங்கிய வேளை 17.02.2023 அதிகாலை 12.10 மணியளவில் சிவபதப்பேறடைந்தார். ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவியின் உள்ளத்திலிருந்து.....!

கடவுள் தந்த உயிர் என்று சொல்லவா - இல்லை
கடவுளிலும் உயர்வென்று சொல்லவா?
நிகரில்லா என் சுவாசம் நீங்களே - என்
மனம் தினம் தினம் ஏங்கும் அன்புத் துணையே!

என் தேசத்து சூரியன் நீங்கள்!
உங்கள் காலடியில் தவழ்ந்த வரை
எந்த இருளும் என்னை அணுகியதில்லை
பார்வையால் மட்டும் பதில் பேசும் - உன் சுபாவம்
என்னைப் பாதுகாத்திருக்கின்றது.

கோபங்கள் என்றானாலும் கூட
தக்க தருணத்தில் செய்ய வேண்டிய
கடமைகள் அனைத்தையும்
உரிய காலத்தில் நிறைவேற்றினீர்களே!

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்
அல்லும் பகலும் நீங்கள் எரிந்தீர்கள்
உங்கள் நிழல் கூடு எமை மதிக்காமல்
கண் விழித்துப் பார்த்துக் கொண்டீர்கள்
கரம் பிடித்த நாள் முதல்
தனித்து நாள் வாழ்ந்ததில்லை
இனிவரும் காலமெல்லாம்
தனிமை தான் வாழ்க்கையன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏங்களின் தடமாய் ஏங்கள் அப்பா

அப்பா!
எனக்கென்று தனிப்பெயர் இருந்தாலும்
உன் பிள்ளை என்று ஊர் சொல்லும் போது
நான் கொள்ளும் கர்வமே தனிதான்

எங்கள் சிறு வயது முதல்
இந்நாள் வரை
ஊர் விழாவிலோ, சடங்கு சம்பிரதாயங்களிலோ
விளையாட்டுக்களிலோ, தேசத்தின் இடங்களிலோ
எல்லாவற்றையும் அழகாய்ச் சொல்லும்
புத்தகம் நீங்கள் தான் அப்பா
வரலாற்று நிகழ்வுகளை வடிவாய்க் கூறும்
உங்களைப்போல் இனி யார் வருவார் அப்பா
எமக்கோர் சந்தேகம் எனின்
எமது மனதை அங்கலாய்ப்பது எங்கள் அப்பா
எங்கே என்று இனி யாரைக் கேட்பது?
உங்கள் பேர்த்திகளும், பேரன்களும்
செல்லச்சண்டை போட இனி
எங்கே போவார்கள்? அப்பா
என்றும் உங்கள் நினைவுகளுடன்

**எத்தனையோ சரிவுகளுக்குப் பிறகும்**
**தைரியமாய்ச் சிரித்துக்கொண்டிருக்கும்**
**அப்பாவுக்கு நிகராக**
**நம்பிக்கையூட்டும் புத்தகம்**
**பிரபஞ்சத்தில் எங்குமே இல்லை**

பிள்ளைகள் : பாபு, கோபு, பிரபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்களின் மனவோலம்

உங்கள் பிள்ளைகளாய் எம்மை
பிரியமளித்துக் காத்தீர்கள்- நாங்கள்
வாழும் வகையில் வாழ்ந்து காட்டினீர்கள்
திக்கற்று நின்ற போதெல்லாம்
திசைகாட்டி கரை சேர்த்தீர்களே!

பேசற்கரிய பொருளாய் இப் புவியில்
நீங்கள் வாழ்ந்த காட்டினீர்கள் மாமா
மாமாவே எமக்கான வரமென- நாம்
எண்ணியிருக்கையில் எமையிங்கு
பேதலிக்க விட்டு எங்கே சென்றீர்கள்?

கூடிக் குலாவிக் கூண்டுப் பறவைகளாய்
குலம் விளங்கக் காத்தீர்கள் மாமா
எம் குழந்தைகளை பள்ளியில்
ஏற்றி இறக்குவதற்கு எம்
இரு கரம் போல் இருந்தீர்களே மாமா

நீங்கள் எம்மை விட்டுச் சென்றது
எங்கள் இரு கைகள் இழந்தது போல்
நிற்கின்றோம் மாமா
தற்பெருமை கொள்ளாத மனம்
நீ என்று சொல்லாத பேச்சு
இவற்றையெல்லாம் இனி யாரிடம் காண்பது மாமா?

ஆறுதலில் மனம் கேட்குதில்லை
நீங்கள் இறந்ததை எங்கள் மனமானது
ஏற்க மறுக்கின்றது மாமா
உங்களின் ஆத்மா சாந்தியடைய
வேண்டுகின்றோம்

**மருமக்கள்– அற்புதராணி, கயானா, சர்மிளா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர்கள் உள்ளத்திலிருந்து....

பாசத்துடனும் அக்கறையுடனும் எங்களை
வழிநடத்திய எங்கள் குலதெய்வமே!
ஒரு கணமும் எண்ணவில்லை அய்யா
மீண்டும் பெற முடியாத பாசம்
பிரிக்க முடியாத பாசம் சகோதர பாசம் அய்யா
எங்கள் பாசத்தின் உறைவிடமே!
மீண்டும் ஒரு பிறப்புண்டேல் - எம்
சகோதரனாக நீங்களே வரவேண்டும் அய்யா
ஒரு தாய் வயிற்றில் பிறந்து ஒன்றாய் இருந்து
ஒற்றுமையாய் வாழ்ந்த காலங்கள் வாட்டுதய்யா
மறக்க முடியாமல் தவிக்கிறமய்யா

அன்பான சகோதரனாக
அக்கறையான சகோதரனாக
அதிகாரமான சகோதரனாக
எங்களுக்கு வழிகாட்டிய
எங்கள் உடன்பிறப்பே!
எங்களை எல்லாம் விட்டு விட்டு
எங்கய்யா போனீர்கள் ?
கொஞ்சக்காலம் இப்பூமியில் வாழாமல்
உங்கள் அன்பான நினைவுகளில்
ஒவ்வொரு நொடியும்
மாறாத்துயரில் தவிக்கவிட்டு - எங்கள்
சகோதரனே உங்கள் இனிமையான
மறக்க முடியாத நினைவுகளுடன்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர் உள்ளத்திலிருந்து...

ஆடிப்பாடி கூடி வாழ்ந்தோம்;
அகமகிழ்ந்து நிமிர்ந்து வாழ்ந்தோம்,
ஓடி ஓடி உழைத்து வாழ்ந்தோம்;
உள்ளமெல்லாம் சிலிர்த்து வாழ்ந்தோம்,
நாடி நாடி உம்மிடம் நிற்போம்,
தேடித் தேடி நம்மிடம் வருவாய்,
சேர்ந்து வாழ்ந்த காலமெல்லாம் தித்திப்பாய்,
பொற்காலம் தான் மிளிரும்,
கல்லாக எமை இருக்க வைத்து
கடுகதியில் கனதூரம் சென்றதேனோ?
ஊமையாய் அழுது விழித்து நின்றோம்,
உறவு சொல்ல இங்கே யாருமில்லை..

**சில நேரங்களில் பகைவன் போல**
**தெரிந்தாலும்,**
**உங்களது பாசத்தை**
**மிஞ்சிட யாரும் இல்லை**
**இவ்வுலகில்**
**எங்கள் அன்பு அப்பா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மகிழ்வான தருணங்களில்....







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவால் துடிக்கும் பேரக்குழந்தைகள் உள்ளத்திலிருந்து...

கொஞ்சும் மழலை உள்ளம் கொண்ட
நெஞ்சம் நிறைந்த எங்கள் அப்பப்பா
பேரன்மார், பேர்த்திமார் வளர்ச்சி கண்டு
பெருமை கொள்ளும் சிங்க அப்பப்பா
சீக்கிரமாய் எமைவிட்டு சிட்டாகப் போனதெங்கே?

பள்ளி முடிந்ததும் சிட்டாய்ப் பறந்து வந்து
எம்மை ஏற்றிச் செல்வீரே!
மைதானத்தில் விளையாட்டு என்றால்
எம்மை வந்து அழைத்துச் செல்வீர்களே
எங்கள் மழலை மனம் கேட்குதில்லை அப்பப்பா
தினம் தினம் அப்பப்பா எங்கே என்றால்
போயிட்டீங்கள் என்கிறார்களே
எங்கு சென்றீர்கள்? எங்கே போனீர்கள்?
திரும்பி வாங்கோ அப்பப்பா!

எனக்கு நான்கு பேராண்டியே, இரண்டு பேர்த்தியே!
என்று நிமிசத்திற்கு நிமிசம்
சொல்லிச் சொல்லி அன்பைக் காட்டி
செல்லச்சண்டை போடுவீர்கள் அப்பப்பா!
இனி நாங்கள் யாரிடம் அன்பைக்காட்டுவது?
எங்கள் சுட்டித்தனங்களைப் படம் பிடிப்பவரே!
எங்கள் கெட்டித்தனங்களை
புகழ்ந்து வடமிழுப்பவரே...!
யாரும் திட்டிப் பேசினால்
எங்களுக்காக போர் தொடுப்பவரே!
எங்களை விட்டு எங்கு போனீர்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமைத் தொட்டு நடக்க வேண்டும்
மீண்டும் இங்கே வாரீர்
புகழ் தொட்டு வந்த சாமி
எங்கள் மனம் தேடிக் கனக்கிறது
தரிசனம் தாருங்கள் சாமி.

**ஆசை நினைவுகளுடன்...**
**பேரப்பிள்ளைகள்,**
**கரணிகா, துகிதன், கிதுசிகா, சாகின்**
**சார்வின் , சாரன்**

**இருக்கும் போது**
**கற்றுக்கொடுத்ததை விட,**
**இறந்த பிறகு அதிகமாய்**
**கற்றுக்கொடுக்கும் ஜீவன்.**
**"அப்பா"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அன்பு மாமாவே !!!

எங்களால் இன்னும் நம்பமுடியவில்லை
ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை மாமா
ஏன் இவ்வளவு அவசரம் உங்களுக்கு ?

நீங்கள் மாணவர்களுக்கு மட்டும் அல்ல
எங்களுக்கும் நல்ல ஒரு வழிகாட்டியாக
இருந்திருக்கிறீர்கள் மாமா
அம்மம்மா ஐயாவை பார்க்க
அவசரப் பட்டீர்களோ? அல்லது
உங்கள் உடன்பிறப்புக்களை
பார்க்க அவசரமாய் சென்றீர்களோ மாமா?

நாங்கள் உங்களுடன் கடைசியாக
செலவழித்த நாட்கள்
எங்கள் வாழ்வில் மறக்க முடியாத
நாட்கள் மாமா
கடைசியாக உங்கள் முகம்கூட பார்க்க முடியாமல்
தொலைவில் இருந்து தவிக்கிறோம் மாமா
எங்களை நீங்கள் ஒருகாலமும்
கண்டித்தது கூட கிடையாது மாமா
நாங்கள் உங்களுடன் ஒரு நண்பர் போல
சிரித்து கதைத்தது தானே கூட மாமா
இனி எப்போது மாமா எங்களுக்கு
அப்புடியான நாட்கள் கிடைக்கும் எங்கள் வாழ்வில் ??
எங்கள் உடம்பில் இறுதி மூச்சு
உள்ளவரை உங்கள் நினைவுகளைச்
சுமந்துகொண்டு வாழ்வோம் மாமா

**மருமக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறாமக்கள் உள்ளத்திலிருந்து... !!!

பெற்றெடுக்கா மக்களென நாமிருந்தாலும்
பெருமனதாய் எமை அணைத்தீரே!
உற்ற நல் உறவுகாட்டி
உரிய அறிவு நீ புகட்டி
மற்றவர் எம்மை மதிக்கும் படி
வாழவைத்த அண்ணா அப்பாவே!

கூற்றுவன் வருங்கால் நீ கூறிய வார்த்தை
வார்த்தையில் எம் குருதி உறையுமப்பா
அப்பாவே! அப்பாவே!
எம் அருமை அண்ணா அப்பாவே!
எங்கு நாம் தேடினாலும்
இவ்விடம் தேடி நீ வருவாயோ?

எங்களின் உறவு நீங்கள் பெரியப்பா
ஆனால் நாங்கள்
என்றும் பாசத்துடன் அழைப்பது
அண்ணா அப்பா
என்றும் எங்கள் அண்ணா அப்பாவின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**திலக்ஷன், விதுர்சன், அகவூரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைந்தது எங்கள் மண்ணின்
## மாபெரும் மனிதம் ஒன்று.

ஓய்ந்தது கிளிநொச்சியின்
விளையாட்டு நாதம்
சாய்ந்தது எம் ஊரின்
சரித்திரப் பாதம்

குப்பிளானில் தோன்றி,
குலப்பெருமை சொல்லும்
தப்பிலாத் தனி மகவாய்
தன்னைத்தானே செதுக்கி
ஒப்பிலா உயர்வினோடு
உருத்திரபுரம் புகுந்த
செப்பரும் சோதிசேரை
இப்போது நாம் இழந்தோம்.

ஒப்பரும் எங்கள் ஊரின்
உயர்மகனாக மாறி
எப்போதும் அவர் புரிந்த
ஒப்பிலாப் பணிகளாலே
இப்போது மட்டுமல்ல,
எப்போதும் எம்மில் வாழ்வார்.

நான் சிவநகரில் கற்கும்போது
உடற்கல்வி கற்பிக்கின்ற
உயர்தனி ஆசானாக – அவரைக்
கடக்கின்ற பொழுதுகள் தான் –என்
கண்முன்னே விரிகிறது.

விளையாட்டு, விளையாட்டென்று
விரைந்திட்ட அவரின் கால்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வின் பின்னும்
களைக்காமல், சளைக்காமல் தான்
கடைசிவரை இருந்ததென்பேன்.

கிளிநொச்சி – கபடியையே
அறிந்திராத காலம் ஒன்று இருந்துளது.
அதையெல்லாம் அகற்றித்தள்ளி
கபடியா? சிவநகர் தான் என்று
இலங்கையே சொல்லும்வண்ணம்
இவர் ஒரு விதி சமைத்தார்.

மூன்றுமாதம் முன்னும் இந்த
மண்ணின் வீரர்களை
தேசியம் அழைத்துச்சென்று
திறம்பட வென்றுகாட்டி
முகம்நிறை மலர்வினோடு
முழுதாக அழைத்துவந்தார்.

"விளையாட்டு பிள்ளைகட்கு
வேண்டாமே" என்று சொல்லும்
பெற்றோருக்கு வீடேறிச்சென்று
விளக்கங்கள் பலதும் கூறி
நினைத்ததை ஈடேற்றிச் சென்று
வெற்றியோடு பிள்ளைகளை
மேடையேற்றி அழகுபார்க்கும்
மேன்மைதனை என்னவென்பேன்?

நிர்வாகம், பதவி என்ற
நிபந்தனைகள் எதுவுமில்லை
கோயிலா அங்கே நிற்பார்,
குழப்பமா அங்கும் நிற்பார்.
நோயிலோ, துன்பத்திலோ
நோகாது தோள் கொடுப்பார்
தேரிலோ, தீர்த்தத்திலோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரின் தெருவிலோ எங்கென்றாலும்
ஆருமே அணுகத்தக்க
அருமைமிகு மனிதரானார்.

அடுத்தடுத்து எங்கள் ஊரில்
அரங்கேறும் இழப்புக்களால்
திடுக்குற்றோம், திணறுகிறோம்
அவ்வடுக்கிலே ஒருவராக
நீங்களும் இணைந்ததேனோ ?

குருதி உறைகிறது
உங்களை நினைக்க..! ஒரு
குருவியைப் போல் ஊரின்
தெருவெல்லாம் பறந்து திரிவீர்களே...!
நூறைத் தொடுவீர்கள் என்றல்லோ இருந்தோம்.
சாவைத் தொட்டுவிட்டீர்களே..!

யாருக்கும் சுமையின்றி
சாகும்வரை வாழும்பேறு எம்
ஊருக்குள் உங்களுக்கும்
சித்தித்திருக்கிறது.
வஞ்சமில்லா மனதால்
பஞ்சமின்றி வாழ்ந்து போகிறீர்கள்.

நொந்து வெந்து நாட்கணக்கில்
கிடந்து அந்தரிக்காமல்....
சிந்தும் சின்னப் புன்னகையுடன்
சீவன் மாய்த்த வரம்.
அது நீங்கள் செய்த தவம்.

வீட்டினைக் காட்டிலும்
இந்த மைதானத்தில்
நீங்கள் வீற்றிருந்த பொழுதுகளே அதிகம் என்பேன்.
கழகம், கழகம் என்று சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவே கதியென்றிருந்து பின்னர்
உழவர் ஒன்றியத்தை
தான் உருவாக்கிய
பிள்ளைகளிடம் ஒப்படைத்து
உருத்திரபுரீஸ்வரரை
முழுமையாய் பற்றிக்கொண்டார்.

சிவப்பணியொன்றே தனது
சிந்தையில் நிறைந்திருக்க
அறப்பணி ஆற்றிநின்ற
அவரது தலைமைப் பண்பு
சிறப்பென மகிழ்ந்திருக்க இன்று
சிவன்பதம் சென்று சேர்ந்தார்.

மறக்குமா எங்கள் நெஞ்சம்
மண்ணிலே நீங்கள் செய்த
அறப்பணி அத்தனையும்.
சிறப்புறு செயல்களாற்றி எம்
சிந்தையில் நிறைந்திருக்கும்
விருப்புறு சோதிசேரை
விடைகொடுத்தனுப்புகின்றோம்.

தவப்பெரும் பணிகளாலே
தரணியில் வாழும் நீங்கள்
சிவப்பேறு பெற்றே ஏக
சிவனடி தொழுதோம் செல்வீர்.

**செல்வி.ஜனகா நீக்கிலாஸ்**
**இல.01, D.10, உருத்திரபுரம்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





குடும்பத்தினருடன்....









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியாப் புகழ் பரஞ்சோதி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தன் வாழ்நாளில் பல நற்சேவையாற்றி இறைபதம் அடைந்த நல்லாசான் அமரர் பரஞ்சோதி ஆசிரியர் அவர்கள் உருத்திரபுரம் பதியிலே வாழ்ந்து நல் ஆசானாய்த் திகழ்ந்து அழியாச் செல்வமாகிய கல்விச் செல்வமதை கல்வித்துறைக்கும், சிறந்த விளையாட்டு நுட்பங்களைக் கையாண்டு மாணவர்களை தேசிய ரீதியில் வெற்றியீட்ட விளையாட்டுத்துறைக்கும் தனை அர்ப்பணித்தும், பல சமூக சேவைகளையும் சிறப்பாய் ஆற்றியதோடு மட்டுமல்லாது உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தில் தலைமைப்பதவி வகித்து இறைதொண்டனாய் சிவபணியாற்றிய பெருமகனார் இவ்வாறு தன் வாழ்நாளை சமூகத்தின் வளர்ச்சிக்காய் அர்ப்பணித்த நல்லுள்ளம் கொண்டவர்.

இவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல உருத்திரபுரம் உருத்திரபுரீச்சரர் திருப்பாதம் சென்றடைய வேண்டிப் பிரார்த்திக் கின்றேன்.

**சாமஸ்ரீ தேசமானிய,**
**சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஷ்கந்தராஜக் குருக்கள்,**
**அகில இலங்கை சமாதான நீதவான்,**
**உருத்திரபுரீச்சரர் ஆலயம்,**
**உருத்திரபுரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed. B.A.,PGDE(Me),Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
☎ :021 2280024 021 2221595.
:021 2280024 021 2221595.
:077 6913244
: shritharanmp@gmail.com
: www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed. B.A.,PGDE(Me),Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
☎ :021 2280024 021 2221595.
:021 2280024 021 2221595.
:077 6913244
: shritharanmp@gmail.com
: www.shritharan.com

கிளிநொச்சி மண்ணுக்கு அடையாளம் தந்த பெருமனிதன். கிளிநொச்சி மாவட்டத்தின் விளையாட்டுத்துறை ஆளுமையும், ஓய்வுநிலைஉடற்கல்விஆசிரியருமானஅமரர். இராமநாதன்பரஞ்சோதி அவர்களின் திடீர் மறைவு, எம்மையெல்லாம் மீளாப் பெருந்துயரில் ஆழ்த்தியிருக்கிறது. யாழ்ப்பாணத்தின் குப்பிளான் மண்ணைப் பூர்வீகமாகக் கொண்டிருந்த போதும், அவர் கிளிநொச்சியின் உருத்திரபுரத்தில் வாழ்ந்த காலமும், அம் மண்ணுக்காக ஆற்றிய பணிகளுமே அதிகமானவை. நீண்டகாலம் உடற்கல்வி ஆசிரியராகப் பணியாற்றிய அவர் தனது பணி ஓய்வின்பின்னரும் பல்வேறு விளையாட்டுக்களின் பயிற்றுவிப்பாளராக இருந்து பலநூற்றுக்கணக்கானமாணவர்களைபல்துறைவிளையாட்டுவீரர்களாகவும், வீராங்கனைகளாகவும் இந்த மண்ணுக்காக உருவாக்கியிருக்கிறார்.

உருத்திரபுர மண்ணின் அடையாளங்களுள் ஒன்றாக விளங்கும் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகத்தின் ஸ்தாபக உறுப்பினர்களுள் ஒருவராகவும், நீண்டகாலம் அக்கழகத்தின் தலைவராகவும் இருந்து அதன் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்குமாக அவர் அயராது உழைத்ததை நானும் அறிவேன். கிளிநொச்சி மண் கபடி என்னும் விளையாட்டுப்பற்றி அறிந்திராத காலச்சூழல்களை எல்லாம் வெகு இயல்பாய் கடந்து, நாடளாவிய ரீதியில் "கபடி என்றால் கிளிநொச்சி" என்கின்ற மகுடத்தை உருவாக்கி இன்றளவும் அதனை தக்கவைத்திருக்கும் தகைசார் பெருமைக்குரிய மனிதனாக கிளிநொச்சி மண்ணின் விளையாட்டுத்துறை வரலாற்றில் சோதிசேர் ஆழப்பதிந்துள்ளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட கபடிப் போட்டி– 2022
1ஆம் இடம் சிவநகர் அ.த.க. பாடசாலை 17வயது பெண்கள்
பேர்த்தி கரணிகா தலைமையில் இறுதியாக சாதித்த தருணம்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கழக வீரர்களின் நலனுக்காகவும், கழகத்தின் வளர்ச்சிக்காகவும் இறுதிக்கணம் வரை உழைத்த அவர் உருத்திரபுர மண்ணின் மைந்தர்களை கிளிநொச்சியின் எல்லாத் திசைகளிலும் விளையாட்டுப் பயிற்றுனர்களாகப் பணிபுரிய வைத்து, விளையாட்டின் வழியிலும் தனிமனித வாழ்வில் உயர்வு காணலாம் என்ற புதுவிதியை உருவாக்கி, எதிர்கால சந்ததிக்கு விளையாட்டின் மீதான ஆர்வத்தை அதிகரிக்கச்செய்த இவரது பணி, காலப்பெரும் பணியே ஆகும்.தனது ஊரின் அத்தனை அமைப்புக்களிலும் செயற்குழு உறுப்பினராக இருந்ததோடு, உருத்திரபுரீஸ்வரர் ஆலய அறங்காவலர் சபையின் உபதலைவராகவும், தலைவராகவும் இருந்து ஆன்மீகப்பணிகளிலும் தன்னை ஆத்மார்த்தமாய் ஈடுபடுத்தியிருந்தார். இதுதவிர இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உள்ளூர் செயற்பாடுகள் அத்தனையிலும் இதய சுத்தியோடு ஈடுபட்டுவந்த இவரது இழப்பு, அவரது குடும்பத் தாருக்கு மட்டுமன்றி எமக்கும் இனி எப்போதும் ஈடுசெய்துவிட முடியாத பேரிழப்பே!

மிகநேர்த்தியான மனிதனாக, ஊரிலுள்ள அத்தனை பேராலும் அறியப்பட்ட ஒருவராக, விளையாட்டு வீரனாக, பயிற்றுவிப்பாளராக, உடற்கல்வி ஆசிரியராக என தான் எடுத்துக்கொண்ட அத்தனை பணிகளிலும் ஆத்மார்த்தமாக ஈடுபட்டு, தன்வழியே தனது பிள்ளை களையும் சமூக நன்மதிப்பு மிக்கவர்களாக உருவாக்கிய ஒரு தந்தையாக வாழ்வின் எல்லாத் தருணங்களையும் எளிதாய் வெற்றி கொண்டதைப் போலவே இந்த வாழ்வின் நிலையாமையையும் எளிதாய் வென்று இறைபாதம் அடைந்த அமரர்.இராமநாதன் பரஞ்சோதி ஆசிரியரின் ஆத்மா உருத்திரபுரீஸ்வரப் பெருமானின் இணையடிகளில் இணைந்திருக்கப் பிரார்த்திப்பதோடு, அவரது இழப்பின் வலி சுமந்திருக்கும் அவரது துணைவியார், பிள்ளைகள் மற்றும் உறவுகளுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களையும் பகிர்ந்து கொள்கிறேன்.

**சிவஞானம் சிறீதரன்,**
**பாராளுமன்ற உறுப்பினர்,**
**யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ தேசியத்தின் நாயகன்

உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகம் உருவாகுவதற்கு முன்னின்று உழைத்தவர்களில் சோதி அண்ணையும் ஒருவர். கழகத்தின் முதலாவது நிர்வாகத் தெரிவில் கழகத்தின் முதலாவது செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். 1987 ஆம் ஆண்டு எமது கழக அங்கத்தவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட இல்ல மெய்வல்லுநர் போட்டியை மிகவும் சிறப்பாக நடாத்தி முடிப்பதற்கு கழகத்தின் செயலாளராகச் செயற்பட்டார். எமது கழகம் முதன் முதலாக கரைச்சிப் பிரதேச விளையாட்டுப்போட்டியில் உதைபந்தாட்டத்தில் சம்பியனாகிய போது (1987) அணியின் கோல் காப்பாளராக செயற்பட்டார். தொடர்ந்து எமது கழகத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர், போசகர் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் போன்ற பதவிகளினை வகித்து வந்தார்.

கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலந்தொடக்கம் இன்று வரை ஆண், பெண் அணிகளை சிறந்த முறையில் போட்டிக்கு அழைத்துச்சென்று பல வெற்றிகளை எமது கழகம் பெற்றுக்கொள்வதற்கு உறுதுணையாக இருந்தார். எமது உதைபந்தாட்ட ஆண்கள் அணி கரைச்சிப் பிரதேச பிரிவின் 1999 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக முதலாமிடத்தைப் பெற்றபோது அணியின் ஆலோசகராகச் செயற்பட்டார். அக்காலத்தில் பெண்கள் கபடி அணியும் பல ஆண்டுகளாக முதலாமிடத்தைப் பெற்றது.

மீள்குடியேற்றத்தின் பின்னரான காலப்பகுதியில் (2010) மீண்டும் கபடி ஆண், பெண் மற்றும் உதைபந்துப் பெண்கள் அணியை உருவாக்கி பெண்கள் அணி தொடர்ச்சியாக 13 ஆண்டுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கபடியின் தேசிய சாதனைகள்..





15 வயது பெண்கள் 3ஆம் இடம்
முதலாவது தேசிய சாதனை (2013)
கிளி/சிவநகர் அ.த.க பாடசாலை



கடற்கரை கபடி 1ஆம் இடம்
மாகாண மட்டம்–கிளி மாவட்டம்




தேசிய மட்ட கபடி 1ஆம் இடம் (2022)
உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகம்






15 வயது ஆண்கள் 1ஆம் இடம் (2015)
கிளி/ சிவநகர் அ.த.க பாடசாலை





15 வயது பெண்கள் 1ஆம் இடம் (2018)
2ஆம் இடம் (2019) கிளி/ சிவநகர் அ.த.க பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபடி உதைபந்தாட்டத்தில் மாவட்ட மட்டத்தில் முதனிலை பெற்று சாதனை படைக்கப் பயிற்சியாளராக செயற்பட்டார். 2013, 2015 ஆம் ஆண்டுகளில் உழவர் ஒன்றிய உதைபந்தாட்டப் பெண்கள் அணியானது வடமாகாண ரீதியில் சம்பியன் பட்டம் வெல்வதற்கு பயிற்சியாளராகச் செயற்பட்டார். எமது கழகம் கரைச்சிப் பிரதேச விளையாட்டுப் போட்டிகளில் தொடர்ச்சியாக பல ஆண்டு முதலாம் இடம்பெறுவதற்கு பல வழிகளிலும் செயற்பட்டவர். கடற்கரைக் கபடியிலும் கிளிநொச்சி மாவட்ட அணி முதன்முதலாக மகாண மட்டத்தில் வெற்றி பெறுவதற்குப் பயிற்சியாளராகச் செயற்பட்டார். 2022 ஆம் ஆண்டு தேசிய ரீதியிலாக நடாத்தப்பட்ட கபடிப்போட்டியில் கிளிநொச்சி மாவட்டம் சார்பாக பங்குபற்றிய எமது உழவர் ஒன்றியப் பெண்கள் அணி முதலாம் இடத்தைப் பெற்று சாதனைப் படைக்க இவருடைய பயிற்சியே முக்கியபங்கு வகித்தது. இவ்வாறு எமது கழகத்தில் பல வெற்றிகளிற்கும், கழக வளர்ச்சிக்கும் முக்கிய காரணமாக இருந்தார். சோதிசேரின் இழப்பு எமது கழகத்திற்கு மட்டுமன்றி கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைக்கே பேரிழப்பாகும். அவரின் வாழ்நாளில் எமது கழகத்திற்கும், விளையாட்டுத்துறைக்கும் அவர் ஆற்றிய பணிகளை நினைவிற் கொண்டு அவரால் நேசிக்கப்பட்ட எமது கழகத்தின் வளர்ச்சியில் தொடர்ந்து பணிப்போம் என உறுதியெடுத்து அவரின் ஆத்ம சாந்திபெற இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**இவரின் சேவையைக் கௌரவித்து தேசியத்தின் நாயகன் என்ற கௌரவத்தை வழங்குகின்றோம்.**

**உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகமும்,**
**சன சமூக நிலையமும்**
**கூழாவடி, உருத்திரபுரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீக்கமற நிறைந்தவர் அண்ணன் பரஞ்சோதி

திக்கெட்டும் இருந்து வந்தோம்
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மாணவராய்
அடைபட்ட சூழலுக்குள் அன்பான அரவணைப்பு
கல்வியுடன் கலைகளும், விளையாட்டும்
எம்மவரின் இணைவுடனே இயங்கிய நாட்களவை
தொண்ணுறெட்டு இரண்டாயிரம் ஆரம்பம் வரை
தொட்டிடாத இடங்களில்லை நாம்.

பரஞ்சோதி அண்ணர் சிரேஷ்ட மாணவத்தலைவர்
வேலுப்பிள்ளை அம்மாவும் விரும்பும் ஒருபிள்ளை
விளையாட்டு மைதானத்தில் திடமான வீரரிவர்
கரப்பந்து, காபடி, உதைபந்து, உடற்பயிற்சி
இன்னுமின்னும் எத்தனையோ எல்லாமாய் நின்றாரே

கலாசாலை தொட்ட நட்பு நிறைவுவரை நீண்டதுவே
மணிவிழா கொண்டாட்டம் உம்வீட்டில்
கிருஸ்ணமூர்த்தி மணிவிழா நாள்
குணபாலன் வீட்டின் ஆண்டுநிறைவு -2022
நட்பின் நீட்சி நண்பர்களே இணைத்திடவே
நீலவேணி வருகையுடன் பத்மாவீட்டு சாப்பாடு
பாட்டும் கூத்தும் கூட்டான போட்டோ எடுப்பும்
வட்டுக்க வயசு போனாலும் சிட்டுக்களாய் சிறகடித்தாய்
பிரியமனமின்றி இணைவோம் மீண்டுமென்று விடைபெற்றோம்
அதற்கிடையில் அண்ணா நீர் விரைவீரென்று- நாங்கள்
யாருமன்று நினைக்கவில்லை

**ஆசிரிய நண்பர்கள்**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை**
**(1999, 1998)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவுதனில் சில வரிகள்

வயதில் முதிர்ந்தவன் நீ – நம்
வகுப்பில் மாணவன் நீ
வன்னி மண்ணில் உறவுகளை
வாஞ்சையோடடு பார்த்திருந்தாய்

கலாசாலை காலத்தில் –எம்
கனவுகளோடு இணைந்தவன் நீ
பரஞ்சோதி என்றாலே – கால்
பங்கின்  வீரனும் நீ

நினைவுகள் பல தந்தாய்– எம்
நினைவுகளோடு ஒன்றித்தாய்
விளையாட்டில் பல நுட்பம்
விருப்புடன் விதந்துரைத்தாய்

ஆண்டுகள் இருபத்தைந்து இன்று
ஆனதென்று இணைந்திருந்தோம்
நீண்டது போகுமென்று நாம்
நினைக்கையில் நீ மறைந்தாய்

கனவுகள் நிரம்பிய உன் உருவத்தை
காணாமல் கண்கள் தேடும்
சிவனடியே சிறந்த தென்று
சென்றனையோ எமைவிட்டு?

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

**சி.குணபாலன்**
**மேலதிக அரசாங்க அதிபர்**
**முல்லைத்தீவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டே வாழ்வெனக் கொண்ட சோதி சேர்

17.02.2023 அன்று அமரத்துவமடைந்த இராமநாதன் பரஞ்சோதி ஆசிரியர் பன்முக ஆற்றல் மிகு பொது சேவைகளை நோக்காகக் கொண்ட விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஆவார்.

மீள்குடியேற்ற காலத்தின் பின்னர் நான் சிவநகர் அ.த.க பாடசாலையில் அதிபராக நியமிக்கப்பட்டபோது உடற்கல்வி ஆசிரியர் திரு.சுசந்தன் அவர்களும் கடமையேற்றிருந்தார். எம்முடன் இணைந்து ஏறக்குறைய 12 வருடங்களுக்கும் மேலாக எந்தவித பலன்களையும் எதிர்பாராது சம்பளமற்ற ஆசிரியர் சேவையினை மேற்கொண்டார் என்பது பலரும் அறிந்திடாத உண்மையாகும். சகல விளையாட்டுக்களிலும் நாட்டம் கொண்டவராகவும், சிறந்த அறிவு. திறன், நுட்பம் மற்றும் அனுபவம் பெற்றிருந்ததோடு விளையாட்டு விதிகளையும் நன்கு கற்று தெரிந்து வைத்திருந்ததுடன், தூரநோக்கு சிந்தனையோடு மாணவர்களை வெற்றி நோக்கிய பாதையில் கொண்டு செல்பவராகவும் விளங்கினார்.

மாணவர்தொகை கூடுதலாக உள்ள பாடசாலைகளுடன் போட்டியிட்டு வெற்றி பெறுவது சிரமமென்று ஊகித்த இவர் போட்டி குறைந்த விளையாட்டினைத் தெரிவுசெய்தால் தேசியமட்டத்தில் வெற்றியீட்ட முடியும் என்ற எண்ணப்பாட்டை மனதில் வைத்து கிளி/ சிவநகர் அ.த.க பாடசாலையில் பெண்கள் உதைபந்தாட்டக் குழாத்தை உருவாக்கினார். முழுமையான பயிற்சிகளை வழங்கி தேசிய சமபோசா வெற்றிக்கிண்ணங்களைப் பெறுவதற்கு வழிகாட்டியாக இருந்தார். அது போன்றே கபடி அணிகளை உருவாக்கம் செய்து சமகாலப்பகுதியில் நான்கு வயதுப் பிரிவுகளையும் வடமாகாணப் போட்டிக்குக் கொண்டுசென்று அந்த நான்கு பிரிவுகளும் தேசியப் போட்டிக்குத் தெரிவாக ஊன்றுகோலாக விளங்கினார். இவ்வெற்றியானது சிறந்த கபடிப் பயிற்றுவிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கௌரவத்தை மேலும் பறைசாற்றி நின்றது. அத்துடன் வருடா வருடம் நடைபெறும் தேசிய விளையாட்டுப் போட்டியில் சிவநகர் பாடசாலையின் தொடர்ச்சியான பங்குபற்றும் சந்தர்ப்பத்திற்கு இவரின் அயராத உழைப்பே காரணம்.

கபடி என்றாலே சிவநகர் பாடசாலை எனும் பெருமையையும், புகழையும் தேசியமட்டத்தில் ஏற்படுத்திய பேராசான். அதேபோன்று வருடாவருடம் வலய, மாகாண, தேசிய ரீதியான போட்டிகளிலும் 300 மாணவர்கள் கற்கும் எமது பாடசாலை 3000 மாணவர்களையுடைய கல்லூரிகளுடன் போட்டியிட்டு வெற்றிவாகை சூடியமையானது பெரும்பான்மை சகோதர மாணவர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள் ஏன் எமது பெற்றோர்களையும் வியப்பில் ஆழ்த்திய பெருமைக்குரியவர். இலங்கையில் மட்டுமன்றி புலம்பெயர் சொந்தங்களின் உதடுகளிலும் வெற்றிக்களிப்பினை உச்சரிக்கக் காரணமாகத் திகழ்ந்தார்.

வடமாகாணம் சார்ந்த போட்டிகளில் 300ற்கு மேற்பட்ட சான்றிதழ்களையும், தேசிய ரீதியான போட்டிகளில் 100ற்கு மேற்பட்ட சான்றிதழ்களையும் எமது மாணவர்கள் பெற்றுக்கொள்ள வழிப்படுத்திய பெருமகான். கிளிநொச்சி மாவட்டத்தில் பதின்மூன்று மாணவர்கள் பயிற்றுவிப்பாளராக நியமனம் பெற்று கடமையாற்றி வருகின்றார்கள் என்றால் அந்த பெருமைக்குரியவர் சோதிசேர் என்பதை யாரும் மறுந்துவிட முடியாது.

பாடசாலையில் நடைபெறுகின்ற சகல இணைபாடவிதான செயற்பாடுகளிலும் ஈடுபாட்டுடன் செயற்பட்டு நிகழ்வுகள் தரமாகவும், சிறப்பாகவும் அமைய இரவு, பகல், வெயில், மழை பாராது அயராது சேவையாற்றியவர் என்பது பலரறிந்த உண்மை. உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தையும், பாடசாலையையும் இணைத்து ஓர் பாலமாக செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. பாடசாலை வெற்றிபெறுவதற்கு கழகமும், கழகம் வெற்றிபெற பாடசாலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றவாறாக ஒன்றித்துப் பயணிக்க பெரும்பங்காற்றினார். இவ்வாறாக அளப்பரிய சேவையினை வழங்கி அமரத்துவம் அடைந்த பரஞ்சோதி ஆசிரியரை சிவநகர், உருத்திரபுர சமூகத்தினர் மட்டுமன்றி கிளிநொச்சி மாவட்டம், வடமாகாணம், தேசியம் என இவரது சேவையை இழந்து நிற்கிறது.

தனக்கென தனித்துவமான வரலாற்றை விளையாட்டின் மூலமாக உருவாக்கிக்கொண்ட பெருமை மிகு ஆசான், பயிற்றுவிப்பாளர். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**திரு ஐ.இராசரட்ணம்**
**ஓய்வுநிலை அதிபர்.**
**கிளி / சிவநகர் அ.த.க. பாடசாலை**
**உருத்திரபுரம்.**

**வாழ்க்கை என்பது**
**நீ எதிர்பார்ப்பது**
**போல் இல்லை**
**ஆனால் நீ நினைத்தபடி**
**மாற்ற முடியும்**
**நீ முயற்சித்தால் மட்டுமே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளி/சிவநகர் பாடசாலையில் 1990 ,1991 காலப்பகுதியில்...










1998, 1999 ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவு ஒன்று சொல்லாமல் சென்றது

இராமநாதன் பரஞ்சோதி அன்பாக "சோதியண்ணா" என எங்கள் எல்லோராலும் கொண்டடப்பட்ட. உறவு ஒன்று சொல்லாமல் சென்றது ஐயா விண்ணுலகு. சின்னம் சிறு வயதில் இருந்து கற்பகவிநாயகர் மேலும் அவரின் குலதெய்வமான சிவகாமி அம்மன் மேல் மிகுந்த பற்றுள்ளவராகத் திகழ்ந்தார். விளையாட்டில் எவ்வளவு ஆர்வமோ அதைவிட கல்வியில் பலமடங்கு ஆர்வங்கொண்டு இருந்தார். குறிப்பாக சிறந்த கணிதமேதையாக எம்மத்தியில் திகழ்ந்தார். கடதாசிக்கூட்டம் பிரிப்பதில் விளையாடுவதில் அவருக்கு நிகர் அவர்தான். கூடுதலாக பத்திரிகை வாசிப்புப் பழக்கத்தை தன்னுள் பிரியமாக வளர்த்துக்கொண்டார்.

குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு அதன் தலைமைக் கிளையான குப்பிளான் விக்கினேஸ்வரா சனசமூக நிலைய வளர்ச்சியில் சிறுவயதிலேயே தன்னை உள்வாங்கி அதன் வளர்ச்சிக்கும் பாடுபட்ட சோதியண்ணா எங்கள் கழகத்தின் உதைபந்தாட்டக் குழுவில் கழகத்தின் சிறந்த கோல் காப்பளராகத் திகழ்ந்தார். திருமணமான பின் திருமணமான கிராமத்துக்கு தன்னால் ஆன மிகப்பெரிய அபிவிருத்தியை ஆசிரியராக சிறந்த அதிபராக இருந்து செயற்படுத்திக்கொண்டு. தனது கடைசி மூச்சுவரை வாழ்ந்த அவர் நாம் சந்திக்கும் வேளைகளில் எல்லாம் எம் கிராமத்தின் வளர்ச்சியிலும் விளையாட்டுக் கழகத்தின் வளர்ச்சியிலும் மிகுந்த பற்றுக்கொண்டவராக வாழ்ந்தார். தனது ஓய்வுநிலைக்குப் பின்னும் தான் வாழ்ந்த கிராமத்தில் பலருக்கும் பலவழிகளிலும் ஊக்கம் கொடுத்த கொடைவள்ளல் ஆவார்.

அந்தக் கிராமத்தில் பல இளைஞர் யுவதிகளின் கல்வி விளையாட்டு இரண்டிலும் மிகுந்த அக்கறைகொண்டு இறுதிவரை வாழ்ந்த வள்ளல் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற வேண்டும் என குப்பிளான் விக்கினேஸ்வரப் பெருமானை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

**குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம்**

**யாழ்.குப்பிளான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நாயகன் புரஞ்சோதி

உருத்திரபுரீச்சுவரம் சிவாலயத்தில் பக்தி நெறியோடு பண்பட்ட சமூகசேவை நாயகனாக திகழ்ந்தார். தான் வாழ்ந்த சமூகம், பாடசாலை, விளையாட்டுக்கழகம், ஆலயம் என எல்லா அமைப்புக்களிலும் தன்னை இணைத்து தளராது சேவை புரிந்து தனக்கென தனியான அடையாளத்தைப் பதித்தவர்.

ஆலயத்தில் அறநெறிப் பாடசாலையையும் சமய விழுமியங் களையும் வளர்த்தெடுப்பதில் பெரும் பணியாற்றினார். பாரிய இடப்பெயர்வு காலங்களில் மக்கள் பணியினை புரிந்து அவலங்களைத் தீர்ப்பதிலும் தமிழ்த்தேசிய உணர்வோடு தமது வீட்டையும் மறந்து பணியாற்றியதை இன்றும் எம் நினைவுக்கு வருகின்றது.

பன்முக ஆளுகை கொண்ட இவர் ஒரு வரலாற்றுப் பெட்டகமாகத் திகழ்ந்தார். "கீதை படிப்பதை விட விளையாட்டு வீரன் இறைவனை இலகுவாக நெருங்கமுடியும்". அவனிடமே "சிறந்த ஆளுமைப் பண்புகளும் நற்பண்புகளும் உருவாகும்" எனும் சுவாமி விவேகானந்தரின் கூற்றை மெய்ப்பிக்க நல் இளைஞர்களை உருவாக்கியவர்.

சிவாலயத்தின் உப தலைவராக நீண்டகாலம் தன்னை சிவப்பணிக்கு அர்ப்பணித்து ஆலய திருப்பணிவேலைகள் கும்பாபிஷேக வேலைகளை சிறப்பாக நிகழ அயராது உழைத்தவர். சிவநெறித் தொண்டரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. அவரின் ஆன்மா சாந்தியடைய உருத்திரபுரீச்வரப் பெருமானின் பாதங்களை பணிவோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

**திரு.மு.கமலக்கண்ணன்**
**செயலாளர்,**
**உருத்திரபுரீச்சுவரர் அறங்காவலர் சபை,**
**உருத்திரபுர சிவாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய மட்ட உதைபந்து 3ஆம் இடம்
கிளி/ சிவநகர் அ.த.க. பாடசாலை (2015)



உதைபந்து மாகாண மட்டம்
1ஆம் இடம் (2013,2017)



உதைபந்து 21வயதின் கீழ் ஆண்கள்
1ஆம் இடம் கரைச்சி
உழவர் ஒன்றியம்



1ஆவது கபடி சாதனை (2002)
வடகிழக்கு மாகாணம் 2ஆம் இடம்





1987 உழவர் ஒன்றிய விளையாட்டு விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் பாரம்பரிய விளையாட்டுக்கள்

**விளையாட்டுக்களை அதன் நிலையினைக் கொண்டு**

*1.* வீர விளையாட்டுக்கள்
*2.* பொழுதுபோக்கு விளையாட்டுக்கள் என இருவகையாகப் பகுக்கலாம்.

**வீர விளையாட்டுக்கள் :**
விற்போர், மற்போர், சிலம்பம், சடுகுடு, மஞ்சுவிரட்டு போன்றவை வீர விளையாட்டுக்களாகும்.

**பொழுதுபோக்கு விளையாட்டுக்கள்:**
சொக்கட்டான், பந்தாட்டம், அம்மானை, பொம்மை, சீட்டாட்டம் போன்றவை பொழுதுபோக்கு விளையாட்டுக்களாகும்.

மஞ்சுவிரட்டு, கோழிச்சண்டை, பன்றிச்சண்டை, ஆட்டுச் சண்டை போன்றவைகளை சில விழாச் சடங்குகளில் விளையாடுவதால் சடங்கு சார்ந்த விளையாட்டுக்கள் என்றும் கூறுவர்.

விளையாட்டுக்களை விளையாடும் இடத்தின்அடிப்படை யில்.

*1.* அக விளையாட்டுக்கள் அல்லது உள்ளரங்க விளையாட்டுக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அக விளையாட்டுக்கள் :**

தாயம், பல்லாங்குழி, தட்டாங்கல், பருப்பு கடைதல், சொல் விளையாட்டு, சங்கிலி, விடுகதை சொல்லுதல் போன்றவை அக விளையாட்டுக்களாகும்.

**புற விளையாட்டுக்கள் :**

சிலம்பம், சடுகுடு, சல்லிக்கட்டு, உறியடித்தல், இரட்டை மாட்டுப் பந்தயம், பம்பரம், குண்டு, காற்றாடி, கிளித்தட்டு போன்ற நிறைய விளையாட்டுக்களை புறவிளையாட்டுக்களாகக் கூறலாம்.

விளையாட்டுக்களில் பங்கு பெறுவோர் அடிப்படையில் விளையாட்டுக்களை,

1. தனிநபர் விளையாட்டுக்கள்
2. இருவர் விளையாட்டுக்கள்
3. குழு விளையாட்டுக்கள்

என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

4. விளையாட்டுக்களில் அமைந்துள்ள பாடல்களின் அடிப்படையில் இதனை,

1. பாடலுள்ள விளையாட்டுக்கள்
2. பாடலில்லா விளையாட்டுக்கள்

என்று இருவகைப்படுத்தலாம்.

சடுகுடு, பூப்பறிக்க வருகிறோம் கழங்கு ஆட்டம், கண்ணாமூச்சி போன்ற சில விளையாட்டுகளில் பாடல்கள் இடம்பெற்றிருக்கும். இவைத்தவிர ஏனைய விளையாட்டுக்களைப் பாடலில்லா விளையாட்டுக்கள் என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் விளையாட்டுக்களில் வெளிக்கள விளையாட்டுக்கள்

- ஓணப்பந்து விளையாட்டு
- கிட்டிப் புள்ளு
- கிளித்தட்டு, தாச்சி
- சடுகுடு, கபடி
- எட்டுக்கோடு

- வழுக்கு மரம் ஏறுதல்
- கயிறு இழுத்தல்
- முட்டி உடைத்தல், உறியடி
- பாரிவேட்டை
- சங்கீதக் கதிரை
- கிளிக்கோடு பாய்தல்

- போர்த்தேங்காய்
- பல்லாங்குழி
- ஒப்பு
- இரட்டை மாட்டுப் பந்தயம்
- மோடி விளையாட்டு
- கண்ணாமூச்சி **(Hide & Seek)**
- குழை எடு
- பேணி அடித்தல், பேணிப்பந்து, தகரப்பந்து
- அம்பெறிதல்
- கோழிச்சண்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வண்டிச்சவாரி
- சில்லிக்கோடு
- இளவட்டக் கல்
- கீச்சு மச்சுத் தம்பலம்

- போளையடி
- வெள்ளமடித்தல்
- சிற்றில், வீடு கட்டி விளையாடுதல்
- கயிறடித்தல்
- கப்பல் விடுதல், தோணி விடுதல்
- குலை குலையாய் முந்திரிக்காய்
- தேர்கட்டி விளையாட்டு
- உப்பு மூட்டை
- எறி பந்து
- தும்பி விளையாட்டு
- தொப்ப விளையாட்டு
- எல்லே எல்லே
- ஆடு வீடு
- ஊஞ்சல்
- தணையடி அடி
- புளியடி புளியடி

- ஒப்பு விளையாட்டு
- மரமேறல்
- நீந்தல்

- ஆறுதல் ஈருருளி ஓட்டம்
- சாக்கு ஓட்டம்
- புளிச்சல்
- தலையணைச் சண்டை
- கள்ளன் காவலன்
- பச்சைக் குதிரை
- காற்றாடி
- எலியும் பூனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தட்டா மாலை
- சில்லுக் கோடு
- கொழுக்கட்டை
- பட்டம்
- பூசணிக்காய் (விளையாட்டு)
- ஓடிப் பிடித்தல், அடிச்சுப் பிடித்தல்
- ஒளித்துப் பிடித்தல்
- கண்கட்டிப் பிடித்தல், கண் பொத்தி விளையாட்டு
- கண்கட்டி ஓட்டம்
- கயிறு பாய்தல்
- சமநிலை பேணுதல்
- கிடுகு பின்னுதல்
- ஊசி நூல் கோர்த்தல்
- மரம் ஏறுதல்
- தேங்காய் துருவுதல்
- கண்கட்டி ஓட்டம்
- கயிறு பாய்தல்
- சமநிலை பேணுதல்
- கிடுகு பின்னுதல்
- ஊசி நூல் கோர்த்தல்
- மரம் ஏறுதல்
- தேங்காய் துருவுதல்
- தட்டாங்கல்
- பாட்டி பேத்தி
- அல்லி மல்லி தாமரை
- வீடு கட்டல்
- வளையல் விளையாட்டு
- ஊஞ்சல்
- சோளக்கதிர்
- சிறுவீடு
- குத்து விளையாட்டு
- குண்டு விளையாட்டு
- வண்டியுருட்டுதல்
- பூச்சி விளையாட்டு
- மரங்கொத்தி (விளையாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளக விளையாட்டுக்கள்

- தாயக் கட்டை
- சொக்கட்டான்
- கொக்கான்
- பல்லாங்குழி
- ஆடும் புலியும்
- பாம்பும் ஏணியும்
- பாண்டி
- பம்பரம்
- ஆடுபுலி ஆட்டம்
- மூன்றுகல் ஆட்டம்
- செப்புசாமான்
- உப்புத் தூக்கல்
- கூட்டாஞ்சோறாக்கல்
- தத்தைக்கா..
- சங்கு சக்கரம்
- பருப்புக்கட
- கிச்சு கிச்சு தாம்பலம்
- ஒத்தையா, ரெட்டையா, கைத் துடுப்பாட்டம்
- கரகர வண்டி
- சீதைப் பாண்டி
- ஒருகுடம் தண்ணி ஊத்தி
- உப்புத் தூக்கல்
- கூட்டாஞ்சோறாக்கல்
- தத்தைக்கா..
- சங்கு சக்கரம்
- பருப்புக்கடை
- குலைகுலையா முந்திரிக்காய்
- கால்தூக்கிக் கணக்குப் பிள்ளை
- நொண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கபடியின் ஆரம்பம்

இங்கு தான் தமிழ் மண்ணில், தமிழர்களால் உருவாக்கப்பட்ட விளையாட்டு இது. இப்போது உலக நாடுகளில் பரவலாக விளையாடப்படுகின்றது. கை-பிடி என்ற வார்த்தையே கபடியாக மாறியுள்ளதாக கருதப்படுகின்றது. கபடி, கபாடி, சடுகுடு, பலிஞ்சடுகுடு என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது. சுமார் 4000 வருடங்களுக்கு முன்பாக இது உருவாக்கப்பட்டுள்ளது. ஜல்லிக்கட்டில் காளைகளை அடக்க செய்யப்படும் பயிற்சிதான் இந்த கபடி விளையாட்டு. ரெய்டர் காளையாக கருதப்பட்டு அவரை எதிரணி வீரர்கள் அடக்குவர். பின்னர் இந்தப் பயிற்சி, வீர விளையாட்டாக உருவெடுத்து இந்தியா மற்றும் தெற்காசிய நாடுகள் முழுவதும் பரவியது. புத்தர் உட்பட பல இளவரசர்கள் தங்கள் பலத்தை நிரூபிக்க சுயம் வரங்களில் இந்த விளையாட்டை விளையாடியுள்ளனர்.

1980 இல் முதன் முதலாக ஆசிய கபடி போட்டி நடத்தப்பட்டு இந்தியா சாம்பியன் ஆனது. முதல் கபடி உலக கோப்பை 2004இல் நடைபெற்றது. இந்தியா முதல் உலக கோப்பையை கைப்பற்றியது. இதுவரை இந்தியா 8 முறை உலக சம்பியன் ஆகியுள்ளது. கபடியில் இந்திய பெண்களும் சளைத்தவர்களல்ல. 2005இல் மகளிருக்கான ஆசிய கபடி போட்டியில் தங்கம் வென்று அசத்தினர். 2012இல் நடைபெற்ற மகளிருக்கான முதல் கபடி உலக கோப்பையை வென்று அசத்தினர். இதுவரை மூன்று முறை உலக சாம்பியன் வென்றுள்ளனர் இந்திய மகளிர் அனைத்து வகை கபடி போட்டிகளிலும் இந்தியர்களே ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

"நான்தான் உங்க அப்பன்டா, நல்லமுத்து பேரன்டா! தங்கப் பிரம்பெடுத்து, தாண்டிக் குதிக்க வாரேன்டா! வெள்ளி பிரம்பெடுத்து விளையாட வாரேன்டா.. கபடி கபடி கபடி..."

என்பது போன்ற நாட்டுப்புற பாடல்களை பாடி கொண்டு கெத்தாக ரெய்டு செல்வர் நம் தமிழர். உடலும் மனதும் வலுப்படுத்துவதே இந்த விளையாட்டின் அறிவியல் இதை உலகத்திற்கு அளித்தவர் நம் தமிழர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபஞ்சம் கூறும் நியதி

- எதுவுமே இங்கு நிரந்தரம் இல்லை.
- காரணம் இல்லாமல் ஒன்றுமே நடக்காது.
- ஏற்றத் தாழ்வே என் இயக்கத்திற்கு காரணம்.
- இன்பமும் துன்பமும் இல்லாமல் வாழ்க்கை நகராது.
- எல்லாமே இங்கு ஆற்றல் பரிமாற்றம் தான்.
- வெறும் பிரச்சினை மட்டுமே தொடர்ந்து இருக்க முடியாது.
- எதை நினைத்தும் கலங்காதே... எல்லாமே என் மாய விளையாட்டுத்தான்.
- இந்த வாழ்க்கை எல்லா அனுபவங்களையும் பெற்றுவிட்டு என்னிடம் வா.
- எப்போது நீ வந்த வேலையை முடிக்கிறோயோ அப்போதே என்னோடு கலந்து விடுவாய்
- உனக்குத் துணையாக பல கோடி ஜீவராசிகள் படைத்திருக்கிறேன்.
- அவற்றோடு அன்பால் இணைந்து அனுபவங்களை பெறு.
- உன் பின்னால் இருந்து மறைமுகமாக நான் தான் செயல்படுகிறேன்.
- எதுவுமே உன் கையில் இல்லை
- எப்போதும் மகிழ்ச்சியாகவே இரு.
- இடுக்கண் வருகால் நகுக
- துன்பத்திலும் சிரிக்கப் பழகு.
- அப்போது என்னால் உனக்கு பிரச்சினைகள் கொடுக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி கவசம்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம்
நெஞ்சிற் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் -
கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள்
கந்த சஷ்டி கவசந் தனை.

**குறள் வெண்பா**

**அமரரிடர் தீர அமரம் புரிந்த**
**குமரனடி நெஞ்சே குறி**
**(நூல் நிலைமண்டில ஆசிரியப்பா)**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயதம் பாசங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெறறென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல் பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர் ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டகுடகு டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்று
உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
என்றெலை வைத்துன் இணையடிகாக்க
என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர் வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க

பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரெண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்துணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க

எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடியட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நாகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தாளெனைக் கண்டாற்கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கண்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணல்ஏரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டு அதுஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
எறிய விஷங்கள் எளிதுடனிறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்

சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்க உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
காத்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்

வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட ன்நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நாவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாயக் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் - சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத்தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்துப் பிள்ளையார் அருளிய
# உடற்கூற்று வண்ணம்

ஒருமட மாது மொருவனு மாகி
இன்ப சுகந்தரு மன்பு பொருந்தி
புணர்வு கலங்கி வொழுகிய விந்து
வூறு சுரோணித மீது கலந்தும்

பணியிலொர் பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதும வரும்பு கமட மிதென்று
பார்வை மெய்வாய்ச் செவி கால்கை ளென்ற

உருவமு மாகி யுயிர்வளர் மாத
மொன்பது மொன்று நிறைந்து மடந்தை
யூதர மகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமு நாள மறிந்து

மகளிர்கள் சேனை தரவணையாடை
மண்படவுந்தியுதைந்து கவிழ்ந்து
மடமடியில் கொங்கை யமுத மருந்தி
யோரறி வீரறி வாகி வளர்ந்து

ஒளிநகை யூறநகை விதழ்மட வாரு
முவர்ந்து முகந்திட வந்து தவழ்ந்து
மடியிலிருந்து மழலை மொழிந்து
வாவிரு போவென நாமம் விளம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைமணியாடையரைவட மாட
உண்பவர் தின்பவர் தங்களொ டுண்டு
தெருவில் இருந்து புழுதி யளைந்து
தேடிய பாலரொடோடி நடந்து
அஞ்சு வயதாகி விளையாடியே

உயர்தரு ஞான குருவும் தேச
முத்தமிழின் கலையுங் கரைகண்டு
வளர்பிறையென்று பலரும் விளம்ப
வாழ்பதினாறு பிராயமும் வந்து

மயிர்முடி கோதியறுபத நீல
வண்டிமிர் தண்டொடை கொண்டை புனைந்து
மணிபொனிலங்கும் பணிக ளணிந்து
மாமயில் போலவர் போவது கண்டு

மதன சொரூபனிவனன மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு கழிய வெறிந்து
மாமயில் போலவர் போவது கண்டு

மனது பெறாம லவர்பிற கோடி
மங்கல செங்கல சந்திகழ் கொங்கை
மருவ மயங்கியிதழமு துண்டு
தேடிய மாமுதல் சேர வழங்கிட

ஒருமுதலாகி முதுபொருளாய்
இருந்த தனங்களும் வம்பி லிழந்து
மதன சுகந்த விதன மிதென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமையும் மாறி இளமையும் மாறி
வன்பல் விழுந்திரு கண்களிருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாத விரோத குரோத மடைந்து
செங்கையினில் ஓர் தடியு மாகியே.

வருவது போவதொருமுது கூனும்
மந்தியெனும்படி குந்தி நடந்து
மதியு மழிந்து செவிதிமிர் வந்து
வாயறியாமல் விடாமல் மொழிந்து

துயில்வரு நேரமிருமல் பொறாது
துகிலுமிழந்து கணையு மழிந்து
தொண்டையு நெஞ்சு முலர்ந்து வறண்டு
தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு

கவியுக மீதி லிவர்மரியாதை
கண்டிடு மென்பவர் சஞ்சன மிஞ்ச
வென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து

தெளிவு மிராமலுரைதடு மாறி
சிந்தையு நெஞ்ச முலைந்து மருண்டு
திடமுமுலைந்து மிகவு மலைந்து
தேறி நலாதர வேதென நொந்து

மறையவன் வேதனெழுதிய வாறு
வந்தது கண்டமுமென்று தெளிந்து
இனியென கண்ட மினியென தொந்த
மேதினி வாழ்வு நிலாதினி நின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன்முறை பேசு மெனவரை நாவு
றங்கி விழுந்துகை கொண்டு மொழிந்து
கடைவிழி கஞ்சியொழுகிட வந்து
பூதமு நாலு கவாசமு நின்று
நெஞ்சு தடுமாறி வருநேரமே

வளர்பிறை போல வெயிறு முரோம
முஞ்சடையும் சிறுகுஞ்சியும் விஞ்ச
மனது மிருண்ட வடிவு மிலங்க
மாமலை போல் யம தூதர்கள் வந்து

வலைகொடு வீசி யுயர்கொடு போக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கின ரேயிவர் கால மறந்து

பழையவர் காணு மெனுமய லார்கள்
பஞ்ச பறந்திட நின்றவர் பந்தரிடுமென
ரிடுமென வந்து பறையிட முந்த
வேபிணம் வேக விசாரியு மென்று

பலரைய மேவி முதியவர் தாமி
ருந்த சவங்கழு வுஞ்சில ரென்று
பணிதுகிறொங்கல் களப மணிந்து
பாவகமே செய்து நாறு முடம்பை

வரிசை கெடாம லெடுமென வோடி
வந்திள மைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலையடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறகிட மூடியழல்கொடு போட
வெந்து விழுந்து முறிந்து நிணங்க
ளூரகி யெலும்பு கருகியடங்கி
யோர்பிடி நீறு மிலாத வுடம்பை
நம்புமடி யேனை யினியாளுமே.

கட்டியணைத்திடும் பெண்டீரு மக்களுங் காலத்தச்சன்
வெட்டி முறிக்கு மரம்போற் சரீசரத்தை வீழ்த்திவிட்டாற்
கொட்டி முழக்கியழுவார் மயானங் குறுகியப்பா
லெட்டியடிவைப்பரோ விறைவா கச்சி யேகம்பனே.

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை : பிறந்து மண்மே
லிறக்கும் பொழுது கொடுப்போவதில்லை யிடை நடுவிற்
குறிக்குமிச் செல்வம் சிவன்றந்ததென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக்கென் சொல்லுவேன் கச்சியேகம்பனே

அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
வப்பனெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னை யெத்தனையெத்தனை பெண்டிரோ
பிள்ளைத்யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னம் யெத்தனை யெத்தனை சென்மமோ
மூடனாயடி யேனு மறிந்திலே
னின்ன மெத்தனை யெத்தனை சென்மமோ
வென்செய்வேன் கச்சியேகம்ப நாதனே.

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள்ளோரு முடிவிலொரு
பிடிசாம்பராய்வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால்பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றேயறிவா ரில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி, பதாகைகள் பிரசுரித்தவர்கள்

- உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகம்
- யாழ்.குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம்
- உதவும் உறவுகள்
- உதவும் கரங்கள்– கனடா
- பிலிப்குமரன் ஆசிரியர்
- இளவேனில் பல்பொருள் வாணிபம்
- பாடசாலை விளையாட்டுப் பயிற்றுனர்கள்
- 2005 O/L மாணவர்கள், கிளி/ உருத்திரபுரம். ம.வி
- சதாசிவம் குடும்பத்தினர்
- 2013 O/L மாணவர்கள், கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலை
- கிளி / சிவநகர் அ.த.க. பாடசாலைச் சமூகம்
- சிவநகர் சனசமூக நிலையம்
- 1998– 1999 யாழ்/ கோப்பாய் ஆசிரிய கலாசாலை நண்பர்கள்
- துவாரகநாதன் –லண்டன்
- கிளிநொச்சி கபடி சங்கம்
- கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்களும், பயிற்றுனர்களும்
- சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள் உருத்திரபுரீஸ்வர ஆலயம்
- ஆலய பரிபாலன சபை , உருத்திரபுரீஸ்வரம்
- கிளி / உருத்திரபுரம் மகா வித்தியாலயம்
- 2003, 2004 A/L மாணவர்கள், கிளி / உருத்திரபுரம் ம.வி
- சிவில் பாதுகாப்புத் திணைக்களம்
- குப்பிளான் நண்பர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றென்றும் எங்கள் உளமார்ந்த நன்றிகள்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

*எனும் வாக்கிற்கமைய எங்கள் இதயத்தெய்வத்தின்
மறைவுச்செய்தி கேட்டு உடன் வந்து துயரில்
பங்குகொண்டு ஆறுதல் கூறி உதவிபுரிந்தோர்க்கும்,
இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டு
அனுதாபங்களையும், ஆறுதல்களையும் கூறி பல்வேறு
வகையான உதவிகள் புரிந்தோர்க்கும் ,
தொலைபேசியில் ஆறுதல் கூறியோர்க்கும், கண்ணீர்
பிரசுரங்கள், பதாகைகள், மலர்வளையங்கள்
நல்கியோர்களுக்கும்,
தாகசாந்தி மற்றும் உணவு வழங்கியோருக்கும்,
சமூக ஊடகங்களில் துயர் பகிர்ந்தோர்க்கும் ,
அந்தியேட்டி மற்றும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில்
பங்குகொண்டோர்க்கும்,
இறுதிக்கிரியை, அந்தியேட்டிக்கிரியை நடத்திய
குருமாருக்கும், நன்றி சொல்லத் தவறிய
அனைத்து உள்ளங்களுக்கும்
எமது நன்றிகளைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.*

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பரஞ்சோதி அ

பரஞ்சோதி + ந

| | |
|---|---|
| மோகனராஜ்<br>+<br>அற்புதராணி<br>↓<br>கரணிகா | கோபிராஜ்<br>(ஆசிரியர்<br>+<br>மாதுரி<br>↓<br>துகிதன்<br>கிதுசிகா |

## பொன்னையா இராமநாதன் + பீதாம்பரம் வாலாம்பிகை

| | | | | |
|---|---|---|---|---|
| பரஞ்சோதி<br>+<br>நாகேஸ்வரி | ●சாரதாதேவி<br>+<br>●ஞானலிங்கம்<br>↓<br>அஜந்தன் (லண்டன்)<br>அனுராஜ் (கனடா)<br>அயல்ராஜ் (சுவிஸ்)<br>ஞானரூபா (லண்டன்)<br>சஞ்சீவ்ராஜ் | ●சிவசோதி<br>+<br>சாந்தகுமாரி<br>(சுவிஸ்)<br>↓<br>லவேனன்<br>லகினா | அருட்சோதி<br>+<br>பாலச்சந்திரன் (கனடா)<br>↓<br>நிவேதா<br>அபிசா | மோகனதாஸ்<br>+<br>ராஜேஸ்வரி<br>(சுவிஸ்)<br>↓ "<br>ஆதுசியா |
| சுமதி<br>(கனடா)<br>+<br>●பஞ்சலிங்கம்<br>↓<br>அஜந்தா<br>பானுதாஸ் | றஜனி<br>(சுவிஸ்)<br>+<br>●கணேசலிங்கம்<br>↓<br>சபீனன் | கலைச்செல்வி<br>+<br>குமார கண்ணதாசன்<br>↓<br>(சுவிஸ்)<br>கவின்<br>கரினி | சச்சிதானந்தம்<br>+<br>வசந்தி<br>(லண்டன்)<br>↓<br>நிதேஸ்<br>நிலேஸ்<br>நிகேஸ் | மீனலோஜினி<br>+<br>கதிர்காமலிங்கம்<br>↓<br>(சுவிஸ்)<br>பிருதிவி<br>பிரமிகா<br>பிருத்திகன் |

தாய்வழி உறவு : பெரியமாமா ●திரிபுரநாதன் (குப்பிளான்), சித்தி புவனாம்பிகை, மாம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...சாதி அவர்களின் வம்சாவளி

...ாதி + நாகேஸ்வரி

| | |
|---|---|
| கோபிராஜ் (ஆசிரியர்) + மாதுரி ↓ துகிதன், கிதுசிகா | சகீகர் (பிரான்ஸ்) + சர்மிளா ↓ சாகின், சார்வின், சாரன் |

...கை

...ம்

### நாகலிங்கம் சுப்பையா + பெரியதம்பி பொன்னம்மா

| பரமேஸ்வரி + ●கருணாகரன் (இந்தியா) | சுப்பிரமணியம் + வசந்தா | பரமலிங்கம் + சுலோசனாதேவி | ●மகாலிங்கம் + ருக்குமணி | நாகேஸ்வரி + பரஞ்சோதி |
|---|---|---|---|---|
| சுபாஜினி, குமுதினி, சுதாகர், ●சசிகரன், பிரதீபன் | ●ஜெயராணி, ஜெயமாலா, ஜெயகலா, ●ஜெயமோகன், ஜெயவாணி | கலாஜினி, ஜீவாயினி, கீதாயினி, தர்சன், தயாயினி | கௌரிதேவி ↓ திவாகர், சோபா, தாரணி, தாரிசன் | |

| யோகேஸ்வரி + இராஜேஸ்வரநாதன் | தேவதாஸ் (பிரான்ஸ்) + சகுந்தலாதேவி | ● தனலட்சுமி | தனேஸ்வரி + திருநிறைச்செல்வன் |
|---|---|---|---|
| திலக்ஷன், விதுர்சன் | யதுர்சன், மிதுலா, ரிஷியா, நவீனன் | | அகவூரன் |

...லிகை, மாமா வைத்தியநாதன் (ஜேர்மனி)

● அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது தந்தையின் விளையாட்டு சாதனைகள் சில.

1. 2002 வடகிழக்கு மாகாண மட்ட கபடி 2ஆம் இடம் 19 வயதுப் பெண்கள் கிளி/சிவநகர் அ.த.க பாடசாலை.

2. 2012 வடமாகாண கபடி 1ஆம் இடம் 19 வயதுப் பெண்கள் கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலை

3. 2013 தேசிய மட்ட கபடி 3ஆம் இடம் 15வயதுப் பெண்கள் கிளி/சிவநகர் அ.த.க பாடசாலை

4. தேசிய மட்ட கபடி 1ஆம் இடம் 2015 ஆம் ஆண்டு 15 வயது ஆண்கள் 2018, 2022ஆம் ஆண்டுகள் 17 வயதுப் பெண்கள் கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலை

5. 2013 , 2017 வடமாகாண உதைபந்து 1ஆம் இடம் பெண்கள் கிளிநொச்சி மாவட்டம் ( உழவர் ஒன்றியம்)

6. 2017, 2021 வடமாகாண கடற்கரை கபடி 1ஆம் இடம் கிளிநொச்சி மாவட்டம் ( உழவர் ஒன்றியம் )

2015 தேசிய மட்ட சமபோசா உதைபந்து 3ஆம் இடம் கிளி/ சிவநகர் அ.த.க பாடசாலை

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி .021 228 5579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org